களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# தமிழ் செவ்விலக்கியப் பதிவுகளில் உயர்கல்வி புலங்கள்

# Streams of Higher Education documented in Classical Tamil Literatures

**முனைவர். மு. யூஜின் ரோசிட்டா*** உதவிப் பேராசிரியை, கல்வியியல் புலம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு. **த. சிகாமணி** முனைவர் பட்ட ஆய்வு மாணவர், கல்வியியல் புலம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு. **அ. முகமது ரஃபி** முனைவர் பட்ட ஆய்வு மாணவர், கல்வியியல் புலம், சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

***Corresponding author:**

**முனைவர். மு. யூஜின் ரோசிட்டா**

Tel: +91 9840417362

E-mail: rosittaugin@gmail.com

**தமிழ் செவ்விலக்கியப் பதிவுகளில் உயர்கல்வி புலங்கள்**

**Streams of Higher Education documented in Classical Tamil Literatures**

**அறிமுகம் (Introduction)**

பொய் அகல, நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்?
வையகம் போர்த்த, வயங்கு ஒலி நீர் - கையகலக்
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு
முன் தோன்றி மூத்த குடி!

(புறப்பொருள் வெண்பா மாலை - கரந்தைப் படலம் 35 | குடிநிலை)

என்னும் பாடல் வரிகளுக்கேற்ப உலகின் அனைத்து நாகரிகங்களுக்கும் முன்பாக தோன்றியது தமிழர் நாகரிகம் என்பதை கீழடி அகழாய்வு முடிவுகளின் மூலம் அறிய முடிகிறது. இத்தகைய பெருமை மிகு தமிழ் சமூகம் அனைத்து துறைகளிலும் முன்னோடியாக விளங்கியிருக்கும் என்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்க முடியாது. எந்த ஒரு சமூகமும், அதன் தேவையை உணர்ந்து புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் முன்னோக்கிய வளர்ச்சி பாதையில் பயணிப்பதன் பொருட்டே அதன் பெருமைகள் அனைத்தும் நிலைநிறுத்தப்படும். இத்தகைய பெருமைகளை உள்ளடக்கிய தமிழ் பண்பாட்டின் கல்வி, தொழில்நுட்பம், பொருளாதாரம் என அனைத்து துறைகளின் வளர்ச்சி பாதையை அறிந்துகொள்ள செவ்விலக்கியங்கள் சிறந்த சான்று என்றால் அது மிகையாகாது. கல்வியே அனைத்து துறைகளின் ஆதாரம் என்றிருக்க செவ்விலக்கியங்களின் குறிப்பிடப்பட்டுள்ள உயர்கல்வித் துறைகள் மற்றும் உயர் கல்வி மன்றங்கள், அதனை சார்ந்த துறைகளின் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் இந்த ஆய்வு பதிவிடுகிறது.

**கல்வி - கற்றறிவாளர்கள்**

பண்பாடு இலக்கியம் முதலான கூறுகளை முறைப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் உயரிய உத்தியே கல்வி எனப்படும். தமிழ் செவ்விலக்கியங்களில் பதிவாகியுள்ள பழங்காலக் கல்வி நிலையை புரிந்து கொள்ள வேண்டிய கடமை தமிழ் பேசும் மாந்தர் அனைவருக்கும் உரியது. கல்வி என்ற சொல் நூல் அல்லது பாடம்(Content) ,

நுவல்வோர் (Teacher), கொள்வோன் (Learner) எனும் முப்பெரும் விடயங்களின் சங்கமம் ஆகும். கற்றல் நடைபெறும் இடங்களில் எல்லாம் கற்பிப்பவர் மற்றும் கற்பவர் என இருவர் இடம்பெறுவர். நூலை நுவலுதலும், கொள்ளுதலும் தொடர்ச்சியாக நடைபெறுவதன் பயனாக கற்றறிவாளர்கள் உருவாக்கப்படுகின்றனர், தமிழ் மொழியில் கற்றறிவாளர்கள் என்னும் சொல், தான் ஈடுபட்டுள்ள கலையைக் கற்று அறிந்து தெளிந்த வல்லவர்கள் என்பதன் சுருக்கமாக அமைகிறது. கற்றலின் பயன் அறிந்து தெளிதல். அறிந்து தெளிந்ததின் வெளிப்பாடாக கற்றறிவாளர்கள் ஈட்டும் சிறப்பு 'நுண்மை பெறுதல்' இப்படியாக கற்றலும்-கற்பித்தலும் இணைந்து தொடரும் கற்றறிவாளர்களை 'ஆய்வறிஞர்கள்' (Research Scholars) என்று குறிப்பிடும் வழக்கம் தற்காலத்தில் உள்ளது.

கடைநிலத்தோ ராயினும் கற்றரிந் தோரைக் தலைநிலத்து வைக்கப்படும் (நாலடியார் 133) எங்கு பிறந்தவராய் இருப்பினும் கற்றறிவாளர்களே முதல் நிலையில் மதிக்கப்படுவர்.

**ஆய்வின் நோக்கம் (Objectives)**

செவ்விலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றறிவாளர்களின் நிலை, கல்வியின் முக்கியத்துவம், பல துறைகள் சார்ந்த நூல்களின் சிறப்புகள், அதன் மூலம் அறிவார்ந்த பண்டைய தமிழ் மரபின் கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் மறுவாசிப்பின் மூலம் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இந்த ஆய்வானது விபரண ரீதியான (Descriptive Study) ஆய்வு முறையை ஏற்று நிகழ்த்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகளைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகள் அனைத்தும் துணை நூல் பட்டியலில் குறிப்பிட பட்டுள்ள நூல்கள் இருந்து சேகரிக்கப் பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு வெளிப்பாடுகள் (Research Findings)**

**கல்வியாண்டு (Duration of Higher Education)**

வேண்டிய கல்வி யாண்டுமூன் றிவுவாது ( தொல். கற்பியல் 186) ஓதற் பிரிவு குறித்த தொல்காப்பிய குறிப்பை ஆராயும் போது எல்லோராலும் விரும்பப்படுகின்ற கல்வி காரணமாக பிரியும் பிரிவு 3 ஆண்டுகளுக்கு உட்பட்டு அமையும் என்ற செய்தி தெரிய வருகிறது. இன்று நடைமுறையில் உள்ள மூன்று ஆண்டு இளங்கலை பட்ட படிப்பின் காலமும், சங்க கால உயர்கல்விக்கான காலமும் ஒத்துப் போவது நோக்கத்தக்கது.

- **உழவு நூல்(Books of Agriculture)**

நன்புலத்து வையடக்கி நாளுமா டோபோற்றிப்
புன்புலத்தைச் செய்தெருப் போற்றியபி-னின்புலத்தின்
பண்கலப்பை யென்றிவை பாற்படுப் பானுழவோன்
நுண்கலப்பை நூலோது வார். (சிறுபஞ்சமூலம் 58)

வைக்கோலைச் சேர்த்து அதனால் உழவு எருதுகளைப் போற்றி புண் செய்யை எருவிட்டு நன்சையாக திருத்தியபின் அந்த நன்செய்யாகப் பண்படுத்துதல் உழுதல் முதலியவற்றைச் செய்பவனே உழவுதொழிலாளன் என்று சொல்வோர் நுண்கலப்பை நூல் ஒதி உணர்ந்தவர் என்னும் இப்பாடலின் மூலம் வெளிப்படும் ‘நுண்கலப்பை நூல் ஓதி உணர்ந்தவர்’ என்று வரிகள் உழவு தொழில் பற்றிய அறிவு ஆதார முறை நூல் வடிவத்தில் இருந்துள்ளமைக்கு சான்றாக அமைகின்றது.

- **கட்டடக்கலை நூல்கள் (Books of Architect and Structural Engineering)**

நூல்அறிப புலவர் நுண்ணிதின்கயிறுஇட்டுத்
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னார்க்கு ஒப்பனை வகுப்பு

(நெடுநல்வாடை 72-75)

கட்டடக் கலை நூல்களைப் படித்து சிறந்து விளங்கிய நுண்ணறிவு பெற்றவர்களால் அரண்மனை கட்டப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் இப்பாடலில், கட்டடக்கலை குறித்த அறிவு, அனுபவத்தால் மட்டுமின்றி நூல்களாக இருந்துள்ளதை உறுதி செய்கின்றது. நூல்கள் எப்படி எழுதப்பட வேண்டும் என்பதை நன்னூல் ஆசிரியர் தெளிவுபட கூடியிருப்பது நோக்கத்தக்கது.

- **சமையல் கலை நூல்கள்(Books of Culinary Art)**

பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்
பணுவலின் வழாஅப் அடிசில்

(சிறுபாண் ஆற்றுப்படை 240-241)

பனிப்பொழியும் இமயமலையைப் போன்ற மார்பினன் எழுதி வழங்கிய சமையல் கலையின் நுண்பொருள் குறிப்பும் பல்வேறு அடிசில் உணவுகள் குறித்த குறிப்புகளும் அடங்கிய 'மணநூல்' என்னும் சமையல் கலை நூல், சமையல் கலையின் அறிவறிதலை எடுத்துரைக்கின்றது.

- **களவு நூல் (Books of Forensic science)**

நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி ஊறுகாப்பாளர் (மதுரைக்காஞ்சி 643-644) களவு நூலைக் கற்றறிந்த வல்லுனர்களால் புகழப்பட்ட ஆண்மை உடையவர் அதாவது நூல்களின் வழியிலிருந்து பிறழாத நுண்ணிதாய் நுணுங்கிய தேர்ச்சியினை உடைய ஊர்க்காப்பாளர் எனும் குறிப்பு களவு கலையை அறிவியல் படுத்திய நூல் இருந்ததற்கான ஆதாரமாக அமைகின்றது.மேற்குறிப்பிட்ட பாடலின் மூலம் ஊர்க்காப்பாளராய் பணியில் சேர விரும்புபவர் களவு நூலைக் கற்றறிந்த வல்லுனர்களால் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என முதல் நிலை தகவலும் அத்தகைய தேர்வானது, நூல்களின் வழிப் பிறழாத நுண்ணிய தேர்வு என்றும் புலப்படுகிறது.

நிலன் அகழ் உளியர் கலன் நசைஇக் கொட்டும் கண்மாறு ஆடவர் ஒழுக்கம் ஒற்றி (மதுரைக்காஞ்சி 640)அதாவது அணிகலன்களை குறி

வைத்து களவாடி கண்ணிமைக்கும் நேரத்தில் மறையும் கள்வர் ஒளியும் இடத்தைக் கண்டறிவதற்காக ஒற்று அறியும் வேலைகளைச் செய்யும் காவலர்கள் என்று பொருள்படும் இப்பாடலின் மூலம் காவலர்களில் நுண் புலனாய்வுப் பிரிவு, சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சிறப்பு பயிற்சி கொடுத்து தனிப் பிரிவாக அக்காலத்தில் இருந்தமைக்குச் சான்றாக அமைகின்றது.

- **சான்றோர்/ கற்றோர் அவை** **(Academia)**

பல் கேள்வித் துறை போக்கிய
தொல் ஆணை நல் ஆசிரியர்
உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடியும்
(பட்டினப்பாலை 170)

பல நூல்கள் முழுமையாகக் கற்றுத் தெளிந்ததோடு. பல்லாண்டுக்கு முன் வாழ்ந்த ஆன்றோர் மரபுகளை எடுத்துக் கூறி, அறிவு ஆதார முறைக்கு வலிமை சேர்க்கக்கூடிய நல்ல ஆசிரியர் பெருமக்கள் வாழ்ந்தனர் எனும் இச்செய்தி சான்றோர் மன்றங்களை வழிநடத்தும் ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பாக அமைகின்றது. குறிப்பாக, அறிவு வாதம் புரியும் இடங்களில் உயர்த்திக் கட்டிய கொடி கல்லாதவர்க்கு அச்சத்தை தரும் வகையில் அமைந்தது என்ற கருத்தில் இருந்து அறிவு ஆதார முறை பல கட்டங்களிலும் வாதத்திற்கு உட்படுத்தி உறுதி செய்யப்பட்ட விதம் தெளிவாகிறது.

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங் – கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து (சிறுபஞ்சமூலம் 91)

சிறந்த கற்றறிவாளராக தன்னை மாற்ற துணிபவன், பின்வரும் நூல்களில் நுண்மை பெற்று, அறிவு ஆதாரத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கின்றது சிறுபஞ்சமூலம். சத்தம்(Grammar)-மொழி வழக்கை

அறிந்து கொள்ள உதவும் இலக்கண நூல்;மெய்ஞானம் (Knowledge) - துறையைச் சார்ந்த அறிவு நூல்; தருக்கம்(Statistics)- அறிவு ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள உதவும் புள்ளியியல் தகவல்கள்; சமயம்(religious/Philosophy)- தத்துவ நூல்; வீடுபேறு(Ethics)- அற நூல்கள் என்பனவாகும். இதனை உற்று நோக்கும்போது தற்காலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் வகுத்துள்ள ஆய்வியல் அறிஞர்(Research Scholars), ஆய்வியல் நிறைஞர்களுக்கான பாடத்திட்டங்களோடு ஒத்துப் போவதை அறியலாம். கற்றறிந்தார் கூறும் கருப்பொருள் இனிதே (இன்னிலை 32) என்பதனை இங்கு நினைவில் கொள்வோம்.

- **வளி(கடல்) தொழில் நுட்பம் (Marine Technology)**

நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக

(புறநானூறு 66)

கடலில் செல்லும் மரக்கலம் காற்று உரிய திசையில் வீசாத போது, களத்தை செலுத்துவதற்குரிய பொறிமுறைகளைக் கையாண்டு கலம் செல்லுமாறு செய்த அறிவாற்றல் உடையவர் நின் முன்னோர் என பொருள்படும் இப்பாடல் கப்பல் செலுத்தும் முறையில் சிறந்த அறிவு ஆதார முறை இருந்ததற்கான சான்றாக அமைகின்றது.

- **உணவு பதப்படுத்தும் தொழில் நுட்பம்( Food processing Technology )**

எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பாலை (பெரும்பாண் ஆற்றுப்படை 259) எந்திரம் ஆரவரிக்கும் ஆலைகளில் கரும்புச்சாற்றை காய்ச்சும் புகை சூழ்ந்த ஆலைகள் இருந்தமைக்கு சான்று பகர்கின்றன.அப்படியானால் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் குறித்த அறிவு ஆதார முறை செவ்விலக்கிய காலத்தில் இருந்திருக்க வேண்டும். ஆலைக்கு அலமரும் தீன் கழைக் கரும்பே(மலைபடு கடாம் 119) ஆலைக்குப் பயன்படுத்துவதற்காக வெட்டப்பட்டுள்ள அசைந்து நிற்கும் இனிய கோலாகிய கரும்பே எனும் மேற்குறிப்பிட்ட இவ்விரு பாடலின் மூலம்

1. வேளாண் உணவுத் தொழிற்சாலைகள்
2. உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம்
3. தொழிற்சாலை, கரும்பாலைகள், எந்திரங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உறுதியாகின்றன

- **உயிர் தொழில்/உடலியல் கல்வி (Medical Technology/Physiology )**

எடுத்தன் முடக்க னிமிர்ந்த நிலையே
படுத்தலோ டாடல் பகரின் அடுத்துயிர்
ஆறு தொழிலென் றறைந்தா ருயர்ந்தாரர்
வேறு தொழிலாய் விரித்து (ஏலாதி 69)

உறுப்புகளை எடுத்தலும் (organ transplantation),முடக்குதலும்(Rheumatism), நிமிரச் செய்தலும் நிலைக்கச் செய்தலும் படுத்தலும் ஆடலும் போன்ற புனர் வாழ்வு மருத்துவ முறைகளான முடக்கு நீக்கியல்(Rheumatoid arthritis) மற்றும் இயன்முறை சிகிச்சை (Physiotherapy) ஆகிய ஆறும் உடம்பு எடுத்த உயிர்களைச் சார்ந்த தொழில்கள் என்று கூறுவர் அறிவில் சிறந்த சான்றோர்கள். மேலும் நன்னூலிலும் உயிர்த்தொழில் குணம் ஆறு என உணர்த்தக்கூடிய வரிகள் உள்ளன .

துய்த்த றுஞ்ச தொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்
(நன்னூல் 452)

மேற்காணும் குறிப்புகளைக் கொண்டு உயிர் சார்ந்த தொழில் ஆறு என்பது திண்ணம். உறுப்பு தானம் செவ்விலக்கிய காலத்தில் இருந்தமைக்கு சான்றாக, எடுத்தன் உறுப்பறுந் தன்ன கொடையுவப்பான் (ஏலாதி 20) என்ற வரிகள் மேலும் வலுசேர்க்கின்றது, உயிர்த்தொழில் என இரு பாடலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் உயிர்களைக் காக்கும் மருத்துவத் துறை வல்லுநர்களின் கருத்துகளைப் பெறுவது சரியான விடை காண வழிவகுக்கும்.

- **உடற்கல்வி (Physical Education)**

மலர்தலை மன்றத்துப் பலருடன் குழிஇ
கையிலும் கலத்தினும் மெய்யுறத் தீண்டி
பெருஞ்சினத்தால் புறக் கொடாஅது
இருஞ் செருவின் இகல் மொய்ம்பினார் (பட்டினப்பாலை 70)

அகன்ற இடத்தை உடைய திடல்களில் பலருடன் கூடி வெறுங்கையாலும் ஆயுதங்களாலும் போர் புரிந்ததற்கான ஒத்திகை பார்த்தனர். இதில் புறமுதுகு காட்டி ஓடாமல் வலிமை நிரூபிக்க போட்டி போட்டனர் என்றும் இப்பாடலின் மூலம் உடற்கல்வி குறித்த அறிவு ஆதார முறை உறுதி செய்யப்படுகின்றது.

- **வேந்தர் தொழில் மற்றும் குடிமைப்பணி (Bureaucrats and Civil Service-Ambassador)**

வேந்தரு தொழிலே யாண்டினது அகமே (தொல். கற்பியல் 187) என்னும் குறிப்பு வேந்தர் கூறிய தொழிலாகிய

1. தூதிற் பிரிவு
2. நாடு காவற் பிரிவு
3. பகை தனி வினை பிரிவு

ஆகியன ஓராண்டுக்கு உட்படவே அமையும் என்ற தகவலும், மேலும் வேந்தர் தொழிலில் கலப்பயிற்சி இருந்தமையும் புலனாகிறது.

மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் பூண்டமைந்த
காலமறிதல் கருத்துங்காற் றூதுவர்க்கு
ஞாலம் மறிந்த புகழ் (ஏலாதி 26)

தூதுவனாக பணி செய்ய பல நல்ல நூல்களை ஆராய்ந்து அறிந்த முன்மதியும், பொலிவுடன் தன் தோற்றத்தை பேணும் திறனும், அஞ்சாத பேராண்மையும், நிரம்பிய கல்வி அறிவும் தன்வயப்படுத்தக்கூடிய பேச்சாற்றலும், காலம் அறிந்து செயல்படும் திறனும் அமையப் பெற

வேண்டும் என்ற இப்பாடலின் குறிப்பைக் கொண்டு குடிமை பணிக்கு மக்களை தயார் செய்த அறிவு ஆதார முறை புலப்படுகிறது.

**விவாதம் (Discussion)**

ஒரு நாகரிகம் அதன் வாழ்வியல் கூறுகள், அறநெறிகள் ஆகியவற்றை இலக்கிய வடிவிலும் நூல்கள் மூலமாகவும் கடத்துமாயின் நிச்சயமாக அது ஒரு மேம்பட்ட நாகரிகம் (Well-refined Civilization) என்பதில் மாற்று கருத்து ஏதும் இருக்க முடியாது. ஆகவே நம் தமிழர் மரபினம் எத்தகைய மேம்பட்ட, அறிவார்ந்த, முற்போக்கு சமூகமாக வாழ்ந்துள்ளோம் என்பதை செவ்விலக்கிய சுவடுகள் நமக்கு தெளிவாக உணர்த்துகிறது. உலக வரலாற்றில் தொழிற்புரட்சியானது சுமார் 1760 முதல் 1840 வரை நீடித்தது என்று கூறப்படுகிறது. ஆனால் நமது தமிழ் இலக்கியமான பெரும்பாணாற்றுப்படையில் வேளாண் உணவுத் தொழிற்சாலைகள், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம், தொழிற்சாலை, கரும்பாலைகள், எந்திரங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உறுதியாகின்றன. இந்த இலக்கியம் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது, இது 4-ஆம் அல்லது 5-ஆம் நூற்றாண்டில் பத்துப்பாட்டு தொகுப்பில் சேர்க்கப்பட்டது என்று டென்னிஸ் ஹட்சன் (Dennis Hudson) என்னும் இந்திய இலக்கிய, வரலாறு, தத்துவ மற்றும் உலக மத ஆய்வறிஞர் கூறுகிறார். மேலும் இந்த செவ்விலக்கியங்களின் மறுவாசிப்பின் மூலம் சமையல் முதல் உயிர் தொழில்/உடலியல் கல்வி (Medical Technology/Physiology) வரை ஒவ்வொரு உயர்கல்வி துறைக்கும் நூல்கள் இருந்ததற்கான உண்மையை நம்மால் உணர முடிகின்றது. பல்வேறு தேசங்களுக்கு சென்று வணிகம் செய்ததற்கான சான்றுகளை பார்க்கும் போது இன்றைய உலகமயமாதல் (Globolisation) கொள்கைகளை பன்னெடுங்காலம் முன்பே தமிழர்கள் பின்பற்றி இருக்கின்றனர் என்று எண்ணத் தோன்றுகிறது. மிக முக்கியமாக பண்டைய தமிழ் சமூகத்தில் கல்வியானது ஏற்ற தாழ்வுகள் அற்று அனைவருக்கும் பொதுவானதாக இருந்துள்ளதையும்,

கற்றறிந்தசான்றோர்களை மட்டுமே போற்றி வணங்கும் மூடநம்பிக்கைகள் அற்ற அறிவார்ந்த சமூகமாக திகழ்ந்துள்ளதை தமிழ் இலக்கிய சான்றுகள் நமக்கு எடுத்துரைக்கிறது.

**முடிவுரை (Conclusion)**

கல்வி என்பது வெறும் பொருளாதார முன்னேற்றத்திற்கானது மட்டுமல்ல, அது சமூக அங்கீகாரத்திற்கான பேராயுதம். கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருந்த நம் முன்னோர்கள் கற்றறிந்த சான்றோர்களை சமூகத்தின் உயந்த நிலையில் வைத்து போற்றி வந்தார்கள் என்பதை தமிழ் கலை-இலக்கிய பண்பாட்டு வரலாறுகளின் ஊடே தெரிந்துகொள்ள முடிகிறது. உலகில் எந்த மொழிக்கும் இல்லாத இலக்கிய வரலாறு கொண்ட மூத்த மொழி தமிழ் என்றால் அது இன்றியமையாதது. இந்த ஆய்வின் மூலம் நமது தமிழ் சமூகம் எத்தகைய அறிவார்ந்த சமூகம் என்பதை நம்மால் உணர முடிகிறது. இத்தகைய கலை மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்தில் உலகிற்கே முன்னோடியாய் விளங்கிய தமிழர் பண்பாட்டு கூறுகளை நமக்கு இட்டுச்சென்ற செவ்விலக்கியங்களுக்கு நன்றி பாராட்டுவது நாம் அனைவரின் கடமையாகும்.

**துணைநூல் பட்டியல் (Reference)**

1. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாண் ஆற்றுப்படை ஆசிரியர் ரா. முருகன் தமிழ் வளர்ச்சித் துறை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2022.
2. இரணிய முட்டத்து பெருகுனன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடம் உரையாசிரியர் பா. சரவணன் தமிழ் வளர்ச்சி துறை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் 2022.
3. இன்னிலை வ.உ. சிதம்பரப்பிள்ளை ஸ்ரீசெண்பகா பதிப்பகம் சென்னை 2021.

4. ஏலாதி உரையாசிரியர் ஆர், சி. சம்பத் ஸ்ரீ செண்பகா பதிப்பகம் சென்னை 2023.
5. கடியலூர் உருத்திர கண்ணனார் பாடிய பெரும்பான் ஆற்றுப்படை உரையாசிரியர் சொ. மகாதேவன் தமிழ் வளர்ச்சி கழகம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2023.
6. கடையூர் உத்திரக் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை உரையாசிரியர் .நா. அருள்முருகன் தமிழ் வளர்ச்சி கழகம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2022.
7. சுவனப்பிரியன். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே" - தமிழ் பருக. Blogger. 17 February 2015. https://suvanappiriyan.blogspot.com/2015/02/blog-post_83.html.
8. தொல்காப்பியம் தெளிவுரை புலியூர் கேசிகன் கொற்றவை வெளியீடு சென்னை 2022.
9. நக்கீரர் பாடிய நெடுநல்வாடை உரையாசிரியர் க. பலராமன் தமிழ் வளர்ச்சித் துறை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் 2022.
10. நாலடியார் மீள் பதிப்பாசிரியர் பா. சரவணன் சந்தியா பதிப்பகம் சென்னை மூன்றாம் பதிப்பு 2015.
11. நான்மணிக்கடிகை சிறுபஞ்சமூலம் தொகுப்பு .. இராசகோபாலப்பிள்ளை மற்றும் கா. ராமசாமி நாயுடு ஸ்ரீ செண்பகா பதிப்பகம் சென்னை 2021.
12. பவனந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும் க்ரியா பதிப்பகம் சென்னை 2010.
13. புறநானூறு உரை ஆசிரியர் புலியூர்க்கேசிகன் ஸ்ரீசெண்பகா பதிப்பகம் சென்னை 2023.

14. மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சி உரையாசிரியர் பா. சரவணன் தமிழ் வளர்ச்சித் துறை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியில் பணிகள் கழகம் 2022.

**ஆசிரியர் குறிப்பு:**

1. முனைவர். மு. யூஜின் ரோசிட்டா, சென்னை பல்கலைக்கழகத்தில் கல்வியியல் புலத்தில் உதவிப் பேராசிரியையாக பணியாற்றி வருகிறார். கல்வியியல் தத்துவங்கள் மற்றும் கல்வியியலில் உள்ள சமூகவியல் கோட்பாடுகளை தமிழ் இலக்கண இலக்கிய ஆதாரங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வதில் ஆர்வம் உள்ளவர் .இவர் எழுதிய கற்க கசடற-திருக்குறள் கதைகளுடன் என்ற புத்தகம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவர் எழுதிய Value Education ஆங்கில பதிப்பு சென்னை பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டு, தொலைதூர கல்வி இளங்கலை பாடப்பிரிவு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பாடப்புத்தகமாக உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தின் வள நபர்களில் ஒருவராக இருந்து வருகிறார். உள்ளடக்கிய கல்வி, வளம் குன்றா கல்வி, கல்வியியல் ஆராய்ச்சி முதலியன இவரது விருப்ப பாடங்கள் ஆகும்.

2. திரு. த. சிகாமணி, சென்னை பல்கலைக்கழகத்தில் கல்வியியல் புலத்தில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஆவார். உள்ளடக்கிய கல்வி, கல்வி உளவியல், ஆசிரியர் கல்வி, கல்வியியல் ஆராய்ச்சி முதலியன இவரது விருப்பப் பாடங்கள் ஆகும்.

3. திரு. அ. முகமது ரஃபி, சென்னை பல்கலைக்கழகத்தில் கல்வியியல் புலத்தில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஆவார். நேர்மறை உளவியல், அளவறி ஆய்வு, கல்வியியல் ஆராய்ச்சி, முதலியன இவரது விருப்பப் பாடங்கள் ஆகும்.